Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C. 224/2024**
Sessions .. .. }
} Prosecution – **PW1**
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | செல்லத்துரை |
| Father/Husband Name | : | வேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025.

<u>(எதிரிகள் ஆஜர். )</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது ஆர்எஸ் மங்களம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2023 ம் தேதி ஆர்எஸ் மங்களம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது ஆய்வாளர் பாஸ்கரனுடன், சார்பு ஆய்வாளர் விஷ்ணுவர்தன், முதல்நிலை காவலர் 1806 சுரேஷ் ஆகியோர்கள் குற்ற சம்பவங்களை தடுப்பதற்கு இரவு ரோந்து புல்லமடை ரோட்டில் தூயஆவிஆண்டவர் சர்ச் முன்பு காலை சுமார் 05.00 மணிக்கு வாகன தணிக்கை செய்தபோது TN 65 AS

5281 என்ற டாடா ஏசி HT Plus என்ற வாகனத்தை தணிக்கை செய்தபோது அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருந்தது. அவற்றை சோதனை செய்தபோது கணேஷ் புகையிலை 225 கிராம் எடை கொண்ட 530 பண்டல்களில் இருந்த கணேஷ் புகையிலை எடையிட்டு பார்த்தபோது 119.250 கிகி இருந்தது, 240 கிராம் எடைகொண்ட 313 பண்டல்களில் இருந்த கணேஷ் புகையிலையை எடையிட்டு பார்த்தபோது 75.120 கிகி இருந்தது. Hons புகையிலை 300 கிராம் எடையில் 34 பண்டல்களில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது 10.200 கிகி இருந்தது. Cool lip 113.4 கிராம் கொண்ட 180 பண்டல்களில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது 20.412 கிகி இருந்தது. ராஜ்நிவாஷ் 100 கிராம் எடையில் 174 பண்டல்களில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது 17.400 கிகி இருந்தது. ZL 01 என்ற பெயரில் புகையிலை கலந்த பாக்கு 174 பண்டல்களில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது 4.800 கிகி இருந்தது. V1 என்ற பெயரில் புகையிலை கலந்த பாக்கு 141 பண்டல்களில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது சுமார் 3.500 கிகி இருந்தது. விமல் பாக்கு 84 கிராம் எடையில் இருந்ததை எடையிட்டு பார்த்தபோது 10.502 கிகி இருந்தது. அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை விசாரித்தபோது அவர் ஆர்எஸ் மங்களம் தாலுகா கோழியார்கோட்டையை சேர்ந்த மாரிகிருஷ்ணன் சித்திரவேலு என்று கூறினார். அந்த டாடா ஏசி வாகனத்தில் இருந்த மற்ற நபரை விசாரித்தபோது புல்லமடையை சேர்ந்த சுப்பையா மகன் ராஜகுமாரன் என்று கூறினார். மேற்படி புகையிலை பொருட்கள் மற்றும் புகையிலை கலந்த பாக்குகள் தமிழக அரசு தடைசெய்யப்பட்ட பொருட்கள் என்பதால் அவர்களை விசாரித்தபோது 1ம் எதிரி சித்ரவேலு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முதல்நிலை காவலர் சுரேசும் கையெழுத்து செய்தோம். காவல் ஆய்வாளர் பாஸ்கரன் ஒரு அத்தாட்சி தயார் செய்து அந்த வாகனத்தையும் அதில் கொண்டுவரப்பட்ட பொருட்களையும் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் முதல் நிலை காவலர் சுரேசும் கையெழுத்து செய்தோம். அத்தாத்தி **அ.சா.ஆ–1**. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள புகையிலை மற்றும் புகையிலை கலந்த பாக்குதான் நாங்கள் 1, 2 எதிரிகளிடம் கைப்பற்றிய பொருட்கள். 10 புகைப்படங்கள் மற்றும் அதற்குரிய சிடி **அ.சா.ஆ.2**. கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நிலையம் கொண்டு வருவதற்கும்,

வழக்கு பதிவு செய்வதற்கும் காவல்ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் காவல்துறையில் 24 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். நான் பலமுறை பலவழக்குகளில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஒவ்வொரு நாளும் என்ன பணி என்பது சம்மந்தமாக ஒரு பணிபதிவேடு இருக்கும் என்றால் சரிதான். அந்த பணிபதிவேட்டை பார்த்தால் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோமா, இல்லையா என்று தெரியவரும் என்றால் சரிதான். அதேபோல் நாங்கள் ஒரு பாக்கெட் டைரி வைத்து அதில் என்னென்ன பணிகள் செய்கிறோமோ அதை குறித்து வரவேண்டும் என்றும், அவ்வப்போது அதை ஆய்வாளரிடம் சமர்பிக்கவேண்டும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு செல்ல ஆரம்பித்தோம் என்றால் 06.10.2023ம் தேதி இரவு 09.00 மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பினோம். 06.10.2023ம் தேதி இரவு முதல் புல்லமடை ரோட்டில்தான் இரவு ரோந்து பணி செய்தோமா என்றால் இல்லை, பல ஊர்களுக்கு சென்றோம். புல்லமடை ரோட்டில் உள்ள தூய ஆவி ஆண்டவர் சர்சுக்கு அருகே வரும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் சுமார் அதிகாலை 04.30 மணியிருக்கும். நாங்கள் மேற்சொன்ன வாகனத்தை தணிக்கை செய்வதற்கு முன்பு எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்றால் 4, 5 பைக்குகள் சென்றன, அதை தணிக்கை செய்தோம். ஒவ்வொரு வாகனத்தையும் தணிக்கை செய்வதற்கு 10 முதல் 15 நிமிடங்கள் ஆகும் என்றால் சரியல்ல. புல்லமடை ரோடு எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி செல்கிறது என்றால் தென்வடலாக செல்கிறது. நாங்கள் எந்த திசையில் இருந்து தணிக்கை செய்தோம் என்றால் ரோட்டின் மேற்குப்புறம் நின்று தணிக்கை செய்தோம். 1, 2 எதிரிகள் ஓட்டி வந்ததாக சொல்லும் வாகனம் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தது என்றால் வடக்கிலிருந்து தெற்குநோக்கி வந்தது. அந்த வாகனத்தை முதலில் சென்று மறித்தது யார் என்றால் நானும், சார்பு ஆய்வாளரும். அந்த வாகனத்தில் ஏறி சோதனை செய்தது யார் என்றால், சார்பு ஆய்வாளர், நான் மற்றும் முதல்நிலைகாவலர் ஆகிய மூவரும். ஆய்வாளர் சர்ச்சில் சேர் போட்டு உட்கார்ந்திருந்தார் என்றால் இல்லை. சர்ச்சில் பாதரும், இரவு நேரக்காவலர்களும் இருப்பார்கள் என்றால் பாதர் இல்லை, இரவுக்காவலர் இருந்தார். சர்ச்சுக்கு

தெற்குப்புறமும், எதிர்புறமும் வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் ஆட்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். சர்ச்சை ஒட்டி Holycross என்ற பெயரில் பள்ளி உள்ளது என்றும், அந்த பள்ளியிலும் இரவு காவலர் உள்ளார் என்றால் இரவுக்காவலர் இல்லை. நாங்கள் சோதனை செய்த இடத்திலிருந்து 150 மீட்டர் தொலைவில் தென்புறமாக ஆர்எஸ் மங்களம் பஸ் ஸ்டாண்ட் இருக்கிறது என்றால் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். 1, 2 எதிரிகள் வந்த வாகனத்தை எவ்வளவு நேரம் சோதனை செய்தோம் என்றால் 2 ½ மணிநேரம். அப்போது பக்கத்தில் வசிப்பவர்கள் மற்றும் சர்ச்சில் இருந்தவர்கள் சோதனை செய்வதை பார்த்தார்கள் என்றால் இல்லை. அந்த பகுதியில் இருந்த பொதுமக்கள் யாரும் வந்து பார்க்கவில்லை. நாங்கள் சோதனை செய்த ரோடு வழியாக ஆட்கள் போய்வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் இரவு ரோந்து பணிக்கு செல்லும்போது தராசு, எடைக்கல் கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர் கைப்பட எழுதினார். அத்தாட்சியையும் காவல் ஆய்வாளர்தான் கைப்பட எழுதினார் என்றால் சரிதான். ஆய்வாளர் கைப்பட எழுதிய ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் நானும், தலைமை காவலர் சுரேசும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் சோதனை செய்து கைப்பற்றிய இடத்திற்கு அருகில் உள்ள வீட்டுக்காரர்களை காவல் ஆய்வாளர் சாட்சிக்கு அழைக்கவில்லை என்றால் அழைத்தார், அவர்கள் பயந்துகொண்டு வரவில்லை. கைப்பற்றப்பட்ட பொருட்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட விவரம் எனக்குதெரியும் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்போதுதான் எடைபோட்டு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. ஒரு பண்டலை பிரித்து அந்த பண்டலில் எத்தனை பாக்கெட்டுகள் இருந்தது என எண்ணிப்பார்க்கவில்லை என்றால் பண்டலில் மேல்புறம் எத்தனை பாக்கெட்டுகள் உள்ளது என்பதும், ஒவ்வொரு பாக்கெட்டின் எடையும் குறிப்பிடப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படங்கள் எங்கு வைத்து, யாரால் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படங்களில் எத்தனை பாக்கெட்டுகள் உள்ளது மற்றும் எடை தெரியும் வகையில் இல்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் புகையிலை சம்மந்தமாக புள்ளிவிவரத்திற்காக வழக்குகள் போடவேண்டும் என்றால் சரியல்ல. நான்

பணிக்கே நான்சொன்ன தேதியில் செல்லவில்லை என்றும், ஆய்வாளர் வழக்கு போட்டதால் அவர் சொன்னதிற்கிணங்க பணிக்கு சென்றதாகவும், 1,2 எதிரிகள் வந்த வாகனத்தை சோதனையிட்டு கைப்பற்றியதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு வேறு வாகனங்களை சோதனையிடவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.